**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 584 of 2025 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ஸ்டாலின்ராஜ்

Father's Name : சுரேஷ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் நல்லாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, டிரைவராக வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்து போன முத்துகுமார் எனது நண்பர். கடந்த 11.11.2024 தேதியன்று இரவு 10.00 மணியளவில் நான் கருமத்தம்பட்டியில் இருந்து எனது இருசக்கர வாகனத்தில் கிட்டாம்பாளையம் தாண்டி வந்து கொண்டிருந்தபோது, எனக்கு பின்னார் கார்த்திகேயன் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். முத்து குமாரும் பல்சர் வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.

2. மார்க்ஸ் கம்பெனி அருகே சென்று கொண்டிருந்தபோது, அன்னூரிலிருந்து கருமத்தம்பட்டி நோக்கி வந்த லாரி முத்துக்குமாரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. லாரியின் பதிவு எண் எனக்கு ஞாபகமில்லை. மோதியதில் முத்துக்குமாருக்கு தலையிலும், கை காலிலும் அடிப்பட்டு விட்டது. நான் முத்து குமாரின் மனைவிக்கு அலைபேசி மூலம் தகவல்

கொடுத்தேன். அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் வந்தது. அதில் முத்துக்குமாரை ஏற்றிக் கொண்டு அவருடன் அவரது மனைவியும் மற்றொரு நண்பரும் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அவருக்கு சிகிச்சை அளித்தார்கள். நான் வந்துவிட்டேன். மறுநாள் நான் சென்று பார்த்தபோது, மாலை 03.00 மணியளவில் முத்துக்குமார் இறந்துவிட்டார். அதன்பின்னர் சம்பவம் நடந்த மார்க்ஸ் கம்பெனி அருகே வந்து விசாரித்தார்கள். போலீசாருடன் நானும், முத்துக்குமாரின் மனைவியும் சம்பவ இடம் வந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவத்தில் இறந்த நபர் என்னுடைய நண்பர் மற்றும் நாங்கள் அனைவரும் ஒன்றாக பணி செய்தோம் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் கிட்டம்பாளையத்திலிருந்து கிளம்பி சென்றேன் என்றால் சரிதான். எனக்கு சுமார் ஐந்து நிமிடத்திற்கு முன்பாக முத்துக்குமார் கிளம்பினார் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் அருகே போதிய வெளிச்சம் இல்லாமல் இருக்கும் என்றால் சரியல்ல, ஓரளவு வெளிச்சம் இருக்கும். எனக்கும் முத்துக்குமார் சென்ற வாகனத்திற்கும் சுமார் 30 மீட்டருக்குள் இருக்கும்.எனக்கு சுமார் பத்து நிமிடங்கள் பின்னால் கார்த்திகேயன் சம்பவ இடம் வந்திருப்பார் என்றால் சரியல்ல. எனக்கு பின்னால் பத்து அடிக்குள் கார்த்திகேயன் வந்தார்.

2. முத்துக்குமார் புதியதாக வாகனம் வாங்கி இருந்தார் மற்றும் மேற்படி வாகனத்திற்கு பதிவு எண் வாங்கவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் இருசக்கர வாகனம் வாங்கியதற்கு எங்களுக்கு ட்ரீட் வைப்பதற்காக நாங்கள் அனைவரும் சென்றோம் என்றால் சரியல்ல. எதிர் திசையில் வந்த வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது நண்பர் இறப்பிற்கு அவரது மனைவி காப்பீடு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும் போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக என்னை காவல் நிலையத்தில் வைத்து தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றும், நான் சம்பவத்தின் பொழுது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் சம்பவ விபத்து ஏற்படவில்லை என்றும் சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் என்பவரால் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் முத்துக்குமார் தான் சம்பவ விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.போலீசார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.04 17:08:37 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**